©
GOVERNMENT OF TAMIL NADU
2022

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 13.60 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

## சிறப்பு வெளியீடு ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 271A] சென்னை, செவ்வாய்க்கிழமை, மே 10, 2022
சித்திரை 27, சுபகிருது, திருவள்ளுவர் ஆண்டு-2053

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

**பொருளடக்கம்**

| | பக்கங்கள் |
|---|---|
| **சட்டமுன்வடிவுகள்:** | |
| எண். 40/2022–தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டம் .. .. | 2–4 |
| எண். 41/2022–தமிழ்நாடு நீக்கறவுச் சட்டம் .. .. .. .. .. .. .. | 5–12 |
| எண். 42/2022–தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் .. .. .. .. | 13–16 |
| எண். 43/2022–தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு (திருத்தச்) சட்டம் .. .. | 17–18 |
| எண். 44/2022–தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண். 3) சட்டம் .. .. .. .. | 19–25 |
| எண். 45/2022–தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண். 4) சட்டம் .. .. .. .. | 26–28 |
| எண். 46/2022–தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண். 5) சட்டம் .. .. .. .. | 29–31 |

**2022—ஆம் ஆண்டு மே திங்கள் 10—ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130—ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 40/2022**

**1971—ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகச் சட்டத்தினை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் எழுபத்தி மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

11—ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. 1971—ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகச் சட்டத்தின் 11—ஆம் பிரிவில்,— தமிழ்நாடு சட்டம் 8/1971.

(1) (1) ஆம் உட்பிரிவில்,—

(i) ''வேந்தர்'' எனும் சொற்றொடருக்காக, ''அரசு'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(ii) வரம்புரையில், ''வேந்தர்'' மற்றும் ''அவர்'' எனும் சொற்றொடர்களுக்காக, முறையே, ''அரசு'' மற்றும் ''அவர்கள்'' எனும் சொற்றொடர்களானவை மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

(2) (2) ஆம் உட்பிரிவில், (i) ஆம் இனத்தில், ''வேந்தர்'' எனும் சொற்றொடருக்காக, ''அரசு'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(3) (2—D) ஆம் உட்பிரிவில், ''வேந்தர்'' எனும் சொற்றொடருக்காக, அவை காணப்படுகின்ற மூன்று இடங்களில், ''அரசு'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(4) (3) ஆம் உட்பிரிவின் முதலாம் வரம்புரையில்,—

(i) (a) ஆம் கூறில், ''வேந்தர்'' எனும் சொற்றொடருக்காக, ''அரசு'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(ii) (b) கூறுக்காக, பின்வரும் கூறானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

''(b) அரசின் கருத்தில் துணைவேந்தரானவர், இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை மேற்கொள்ள மறுத்தல் அல்லது வேண்டுமென்றே செயல்படாமல் இருத்தல் அல்லது அவரிடம் உற்றமைந்துள்ள அதிகாரங்களை தவறாகப் பயன்படுத்துதல் அல்லது முறைகேடான நடத்தை அல்லது தவறான மேலாண்மை அல்லது ஒழுங்கின்மையை உள்ளடக்கும் அவரது நடத்தை அல்லது துணைவேந்தரானவர் பதவியில் தொடர்ந்து இருப்பது பல்கலைக்கழகத்தின் நலனுக்கு தீங்கு விளைவிப்பதாக அரசுக்கு தோன்றினால், அரசானது, பின்வரும் நபர் ஒருவரைக் கொண்டு விசாரணை ஒன்றை மேற்கொள்ள ஆணையிடுதல் வேண்டும்,—

(i) உயர்நீதிமன்றத்தின் நீதிபதியாக இருக்கும்; அல்லது

(ii) அரசு தலைமைச் செயலாளர் படிநிலைக்கு குறையாத அரசு அலுவலராக இருக்கிற அல்லது இருந்துள்ள அத்தகைய நபர்,

அதில் துணைவேந்தருக்கு விளக்கம் ஒன்றை அளிப்பதற்கு வாய்ப்பு ஒன்று வழங்கப்படுதல் வேண்டும். விசாரணை அறிக்கையினை கருத்தில் கொண்டு, துணைவேந்தருக்கு விசாரணை அறிக்கையின் நகல் ஒன்று அளிக்கப்பட்டு, மற்றும் அதன் மீது அவரது மேல் விளக்கம், ஏதேனும் இருப்பின், அதனை, அவரை பணிநீக்கம் செய்து ஆணை வெளியிடுவதற்கு முன்பாக, சமர்ப்பிக்க கோருதல் வேண்டும்.'' ;

(5) (4) ஆம் உட்பிரிவிற்காக, பின்வரும் உட்பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். அதாவது;—

''(4) துணைவேந்தர் பதவியில் தற்காலிகக் காலியிடம் எதுவும் ஏற்படும்போதோ அல்லது துணைவேந்தரின் வருகையின்மை காரணத்தினாலோ அல்லது பிற காரணம் எதனினாலோ, அவரது பதவியின் அதிகாரங்களைச் செலுத்துவதற்கும், கடமைகளைப் புரிவதற்கும் துணைவேந்தர் இயலாதிருக்கும்போது, மேலாண்மைக் குழுவானது, கூடிய விரைவில், துணைவேந்தரின் அதிகாரங்களைச் செலுத்துவதற்கும், கடமைகளைப் புரிவதற்கும் தேவையான ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும்.''.

**நோக்கக் காரண விளக்கவுரை.**

1949–ஆம் ஆண்டு குஜராத் பல்கலைக்கழகச் சட்டம் (சட்ட எண்.50/1949) மற்றும் 1991–ஆம் ஆண்டு தெலுங்கானா பல்கலைக்கழகச் சட்டத்தில் (சட்ட எண்.4/1991), பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரை நியமிக்க, தொடர்பான மாநில அரசானது அதிகாரத்தைக் கொண்டுள்ளது. 2000–ஆம் ஆண்டு கர்நாடகா மாநில பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் படி (சட்டம் 29/2001) துணைவேந்தரானவர் மாநில அரசின் ஒப்புதலுடன் வேந்தரால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

2. மேற்சொன்ன பிற மாநில பல்கலைக்கழக சட்டங்களுக்கு ஏற்ப, தமிழ்நாடு மாநில அரசானது, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரை நியமிக்க அதிகாரமளிக்கப்படுதல் வேண்டும் என கருதப்படுகிறது. எனவே, அரசானது, அந்த நோக்கத்திற்காக, 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் 8/1971) தக்கவாறு திருத்துவதென முடிவு செய்துள்ளது.

3. இந்தச் சட்டமுன்வடிவானது, மேற்சொன்ன முடிவிற்கு செயல் வடிவம் கொடுக்க விழைகிறது.

**எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்,**
*வேளாண்மை– உழவர்*
*நலத்துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை,
2022 மே 10.

**கி. சீனிவாசன்,**
*செயலாளர்.*

2022–ஆம் ஆண்டு மே திங்கள் 10–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 41/2022**

**குறித்த சில இயற்றுச்சட்டங்களை நீக்கறவு செய்வதற்கானதொரு சட்ட முன்வடிவு.**

இணைப்புப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பயன்படுத்தப்பட்ட அல்லது மற்றபடி வழக்கத்தில் இல்லாமல் போயிருக்கிற அல்லது குறித்த வகையில் மற்றபடி வெளிப்படையாக குறித்த வகையில் நீக்கறவு செய்யப்பட்டதன் மூலம் தவிர பிறவாறு நடைமுறையில் அற்றுப்போனவையாக இருக்கும் இயற்றுச் சட்டங்கள் வெளிப்படையாக மற்றம் குறிப்பாக நீக்கறவு செய்யப்படுதல் வேண்டும் என்பது உகந்ததாய் இருப்பதால்;

இந்தியக் குடியரசின் எழுபத்தி மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்ற பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

1. இந்தச் சட்டம், 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீக்கறவுச் சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பு

2. இணைப்புப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள இயற்றுச் சட்டங்கள் ஈங்கிதனால் அதனின் ஐந்தாவது பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அளாவுகைக்கு நீக்கறவு செய்யப்பட்டது. குறித்த சில இயற்றுச் சட்டங்களின் நீக்கறவு.

காப்புரை. 3. இந்தச் சட்டத்தால் நீக்கறவு செய்யப்படும் இயற்றுச் சட்டம் எதுவும் பிற இயற்றுச் சட்டம் எதனையும் பாதிக்காது. அதில் நீக்கறவு செய்யப்பட்ட இயற்றுச் சட்டம் பயன்படுத்தப்பட்டிருக்கிற போதும் சேர்க்கப்பட்டிருக்கிற போதும் அல்லது சுட்டப்படும் போதும்;

மற்றும் இந்தச் சட்டம் செல்லுந்தன்மையையோ, செல்லாத தன்மையையோ அல்லது செயல்திறத்தையோ அல்லது ஏற்கனவே செய்து முடிக்கப்பட்ட எதனையும் அல்லது பாதிக்கப்பட்டதை அல்லது உரிமையையோ, உரிமை மூலத்தையோ, கடப்பாட்டையோ அல்லது ஏற்கனவே பெறப்பட்ட கடப்பாட்டை அதிகப்படியானதையோ அல்லது ஏறப்டுத்தப்பட்டிருப்பதையோ அல்லது தீர்வு எதனையும் அல்லது தொடர்பான நடைமுறையை அல்லது பற்று எதனலிருந்தும் அல்லது பற்றினை விடுவிப்பதை தண்டம், உதவியையோ, கடப்பாட்டையையோ, கோருதலையோ அல்லது தேவையையோ அல்லது ஏற்கனவே வழங்கப்பட்ட உறுதிமொழியையோ அல்லது நிரூபிக்கப்படும் கடந்தகால செயல் அல்லது விசயம் எதனையும் பாதிக்காது.

கொள்கை எதனையும் அல்லது சட்டத்தின் ஆட்சியை அல்லது ஏற்படுத்தப்பட்ட அதிகார வரம்பை அல்லது அமைவுமுறையோ அல்லது வாதுரையின் போதோ, வழக்கத்தையோ அல்லது நடைமுறையையோ அல்லது இருந்து வரும் பழக்கவழக்கத்தையோ, வழக்காறையோ, சலுகையையோ, தடையையோ, விலக்கையோ, அலுவலகத்தையோ அல்லது பணியமர்த்தத்தையோ எவ்வாறிருப்பினும் அவை முறையே எந்த முறையிலும் ஈங்கிதனால் இயற்றுச் சட்டத்தில் அல்லது இயற்றுச் சட்டம் எதிலிருந்தும் எந்தமுறையிலும் உறுதி செய்யப்பட்டிருக்கலாம் அல்லது ஏற்பளிக்கப்பட்டிருக்கலாம் அல்லது அதன் மூலம் பெறப்பட்டிருக்கலாம் என்றிருக்கிற எதுவும் பாதிக்காத வகையில் இருக்கும்;

இயற்றுச் சட்டம் எதுவும் புத்துயிரளித்தல் அல்லது அதிகார வரம்பு எதனையும் மீட்டெடுத்தல் அலுவலகம், பழக்க வழக்கம், பொறுப்பு, உரிமை, உரிமை மூலம், சலுகை, தடை, விலக்கு, பயன்படுத்துதல், செய்தொழில், நடைமுறை அல்லது பிற பொருட்பாடு அல்லது தற்பொழுது இல்லாமல் இருக்கும் பொருள் அல்லது செல்லாற்றலிலுள்ளவை இந்தச் சட்டத்தால் நீக்கறவு செய்யப்படுவதால் பாதிப்பிற்குள்ளாகாது.

**இணைப்புப்பட்டியல்.**

**நீக்கறவுகள்.**
**(2–ஆம் பிரிவைக் காண்க)**

| *வரிசை எண்* | *ஆண்டு* | *எண்* | *குறுந்தலைப்பு* | *நீக்கறவின் அளாவுகை* |
|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* |
| | | | ***குடியரசுத் தலைவரின் சட்டம்*** | |
| 1. | 1976 | 31 | 1976 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடன் நிவாரணச் சட்டம். | முழுவதும் (தமிழ்நாடு மாநிலத்திற்கு அதன் பொருந்துகை) |
| | | | *தமிழ்நாடு சட்டங்கள்* | |
| 2. | 1873 | I | 1873 ஆம் ஆண்டு தமிழ்நாடு வன யானைகள் பாதுகாப்புச் சட்டம். | முழுவதும் |
| 3. | 1879 | II | 1879 ஆம் ஆண்டு நீலகிரி விளையாட்டு மற்றும் மீன் பாதுகாப்புச் சட்டம். | முழுவதும் |
| 4. | 1929 | III | 1928 ஆம் ஆண்டு ஜைனர் வாரிசுமுறைச் சட்டம். | முழுவதும் |
| 5. | 1940 | XX | 1940 ஆம் ஆண்டு இந்திய மருத்துவ பட்டங்கள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 6. | 1942 | XXIV | 1942 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி, மாவட்ட நகராட்சிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் (இரண்டாம் திருத்தச்) சட்டம் . | முழுவதும் |
| 7. | 1946 | XVI | 1946 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் (இரண்டாம் திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 8. | 1947 | II | 1947 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 9. | 1947 | XXIV | 1947 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சி மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 10. | 1949 | XXX | 1949 ஆம் ஆண்டு தமிழ்நாடு மருந்துப் பொருட்கள் (கட்டுப்பாடு) சட்டம். | முழுவதும் |
| 11. | 1949 | XLVII | 1949 ஆம் ஆண்டு தமிழ்நாடு பருத்தி (வணிக இருப்புச் சரக்குகள்) கணக்கீட்டுச் சட்டம். | முழுவதும் |
| 12. | 1951 | XXIV | 1951 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள், மாவட்ட மன்றங்கள் மற்றும் கிராம ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 13. | 1954 | XXIV | 1954 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்களின் பதிவு (தமிழ்நாடு திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 14. | 1956 | XXI | 1956 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) திருத்தச் சட்டம். | முழுவதும் |
| 15. | 1959 | 21 | 1959 ஆம் ஆண்டு இந்திய கூட்டாண்மை (தமிழ்நாடு திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 16. | 1960 | 10 | 1960 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடற்கூற்றியல் (திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 17. | 1960 | 11 | 1960 ஆம் ஆண்டு தமிழ்நாடு விழிவெண்படல ஒட்டுதல் சட்டம். | முழுவதும் |

**இணைப்புப்பட்டியல்.**

**நீக்கறவுகள்.**
**(2—ஆம் பிரிவைக் காண்க)**

| *வரிசை எண்* | *ஆண்டு* | *எண்* | *குறுந்தலைப்பு* | *நீக்கறவின் அளாவுகை* |
|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* |
| 18. | 1960 | 12 | 1960 ஆம் ஆண்டு சட்டத் தொழிலாற்றுபவர்கள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 19. | 1961 | 4 | 1961 ஆம் ஆண்டு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) சட்டம். | முழுவதும் |
| 20 | 1964 | 20 | 1964 ஆம் ஆண்டு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) சட்டம். | முழுவதும் |
| 21. | 1964 | 29 | 1964 ஆம் ஆண்டு திருவாங்கூர் – கொச்சின் சுண்ணாம்பு கற்கள் (கட்டுப்பாடு) நீக்கறவுச் சட்டம். | முழுவதும் |
| 22 | 1965 | 8 | 1965 ஆம் ஆண்டு தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர் பாதுகாப்பு (தொடர்ந்து இருந்துவருதல்) சட்டம். | முழுவதும் |
| 23 | 1965 | 35 | 1965 ஆம் ஆண்டு இந்திய கூட்டாண்மை (தமிழ்நாடு திருத்தச்) சட்டம். | சட்டத்தின் 3 ஆம் பிரிவு |
| 24 | 1971 | 9 | 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டிடங்கள் (குத்தகை மற்றும் வாடகை கட்டுப்பாடு) சட்டம். | முழுவதும் |
| 25 | 1971 | 27 | 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டிடங்கள் (குத்தகை மற்றும் வாடகை கட்டுப்பாடு) இரண்டாம் திருத்தச் சட்டம். | முழுவதும் |
| 26 | 1971 | 31 | 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்ற கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டு (திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 27 | 1971 | 32 | 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டிடங்கள் (குத்தகை மற்றும் வாடகை கட்டுப்பாடு) செயல்முறை ஆணைகளின் செல்லும் தன்மையாக்குதல் சட்டம். | முழுவதும் |
| 28 | 1972 | 27 | 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டிடங்கள் (குத்தகை மற்றும் வாடகை கட்டுப்பாடு) திருத்தச் சட்டம். | முழுவதும் |
| 29. | 1972 | 38 | 1972 ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டம். | முழுவதும் |
| 30. | 1973 | 6 | 1972 ஆம் ஆண்டு மேட்டூர் நகரம், குற்றாலம் நகரம் மற்றும் பவானிசாகர் நகரம் (திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 31. | 1973 | 23 | 1973 ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டிடங்கள் (குத்தகை மற்றும் வாடகை கட்டுப்பாடு) திருத்தச் சட்டம். | முழுவதும் |
| 32. | 1975 | 23 | 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடியிருப்பு கையுடைமையாளர்கள் (வெளியேற்றுவதிலிருந்து பாதுகாப்பு) மறுஇயற்றுச் சட்டம். | முழுவதும் |
| 33. | 1978 | 40 | 1978 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடன் நிவாரணச் சட்டம். | முழுவதும் |
| 34. | 1979 | 40 | 1979 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடன் நிவாரணச் சட்டம். | முழுவதும் |
| 35. | 1980 | 13 | 1980 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடன் நிவாரணச் சட்டம். | முழுவதும் |
| 36. | 1981 | 18 | 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடைநோய் (திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 37. | 1982 | 38 | 1982 ஆம் ஆண்டு இந்திய கூட்டாண்மை (தமிழ்நாடு திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 38. | 1982 | 50 | 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடன் நிவாரணச் சட்டம். | முழுவதும் |
| 39. | 1986 | 45 | 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 40. | 1986 | 46 | 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்தச்) சட்டம். | முழுவதும் |

**இணைப்புப்பட்டியல்.**

**நீக்கறவுகள்.**
**(2—ஆம் பிரிவைக் காண்க)**

| *வரிசை எண்* | *ஆண்டு* | *எண்* | *குறுந்தலைப்பு* | *நீக்கறவின் அளாவுகை* |
|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* |
| 41. | 1986 | 47 | 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 42. | 1986 | 48 | 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (நான்காம் திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 43. | 1986 | 59 | 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியம் (திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 44. | 1986 | 73 | 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (தனிவகைமுறை மற்றும் செல்லும்தன்மையாகும்) சட்டம். | முழுவதும் |
| 45. | 1986 | 80 | 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 46. | 1992 | 16 | 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஜி.டி.நாயுடு வேளாண் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 47. | 1992 | 30 | 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுவிற்பனை வரி (திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 48. | 1992 | 31 | 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுவிற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 49. | 1992 | 37 | 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவகங்களின் ஆடம்பர வசதி மற்றும் தங்கும் விடுதி வரி (திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 50. | 1992 | 52 | 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக (மூன்றாம் திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 51. | 1992 | 54 | 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டம் | முழுவதும் |
| 52. | 1993 | 5 | 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக (இரண்டாம் திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 53. | 1993 | 22 | 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 54. | 1993 | 24 | 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுவிற்பனை வரி (திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 55. | 1993 | 25 | 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுவிற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 56. | 1994 | 2 | 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுவிற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 57. | 1994 | 3 | 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுவிற்பனை வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 58. | 1994 | 11 | 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குபடுத்துதல்) சட்டம். | முழுவதும் |

**இணைப்புப்பட்டியல்.**

**நீக்கறவுகள்.**
**(2—ஆம் பிரிவைக் காண்க)**

| *வரிசை எண்* | *ஆண்டு* | *எண்* | *குறுந்தலைப்பு* | *நீக்கறவின் அளாவுகை* |
|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* |
| 59. | 1994 | 17 | 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுவிற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 60. | 1994 | 32 | 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுவிற்பனை வரி (திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 61. | 1994 | 33 | 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுவிற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 62. | 1994 | 37 | 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 63. | 1994 | 38 | 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 64. | 1994 | 55 | 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுவிற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 65. | 1995 | 10 | 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுவிற்பனை வரி (திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 66. | 1995 | 18 | 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுவிற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 67. | 1995 | 19 | 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுவிற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 68. | 1995 | 20 | 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுவிற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 69. | 1995 | 21 | 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 70. | 1995 | 36 | 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுவிற்பனை வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 71. | 1995 | 37 | 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுவிற்பனை வரி (ஆறாம் திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 72. | 1995 | 39 | 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 73. | 1996 | 10 | 1996 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுவிற்பனை வரி (திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 74. | 1996 | 30 | 1996 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (மேல்வரி) நீக்கறவுச் சட்டம். | முழுவதும் |
| 75. | 1996 | 32 | 1996 ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவகங்களின் ஆடம்பர வசதி மற்றும் தங்கும் விடுதி வரி (திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 76. | 1996 | 37 | 1996 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுவிற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டம். | முழுவதும் |

**இணைப்புப்பட்டியல்.**

**நீக்கறவுகள்.**
**(2–ஆம் பிரிவைக் காண்க)**

| *வரிசை எண்* | *ஆண்டு* | *எண்* | *குறுந்தலைப்பு* | *நீக்கறவின் அளாவுகை* |
|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* |
| 77. | 1996 | 38 | 1996 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுவிற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 78. | 1997 | 11 | 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுவிற்பனை வரி (திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 79. | 1997 | 12 | 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுவிற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 80. | 1997 | 13 | 1997 ஆம் ஆண்டு பொதுவிற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 81. | 1997 | 14 | 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் மோட்டர் வாகனங்கள் நுழைவதன் மீதான வரி (திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 82. | 1997 | 30 | 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குபடுத்துதல்) சட்டம். | முழுவதும் |
| 83. | 1997 | 38 | 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டம் | முழுவதும் |
| 84. | 1997 | 39 | 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுவிற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 85. | 1997 | 40 | 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுவிற்பனை வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 86. | 1997 | 60 | 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுவிற்பனை வரி (ஆறாம் திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 87. | 1998 | 2 | 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுவிற்பனை வரி (ஆறாம் திருத்த) திருத்தச் சட்டம். | முழுவதும் |
| 88. | 1998 | 3 | 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குபடுத்துதல்) சட்டம். | முழுவதும் |
| 89. | 1998 | 19 | 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் மோட்டர் வாகனங்கள் நுழைவதன் மீதான வரி (திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 90. | 1998 | 20 | 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுவிற்பனை வரி (திருத்தச்) சட்டம். | முழுவதும் |
| 91. | 1998 | 21 | 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுவிற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டம். | முழுவதும் |

**நோக்கக் காரண விளக்கவுரை.**

தமிழ்நாடு மாநில சட்ட ஆணையமானது கூறப்பட்ட இயற்றுச் சட்டங்கள் மிகவும் பழமையானதாக மற்றும் வழக்கத்தில் இல்லாமல் போயிருக்கிற குறித்த சில இயற்றுச் சட்டங்களை நீக்கறவு செய்வதற்கு தன்னுடைய பல்வேறு அறிக்கைளில் பரிந்துரை செய்துள்ளது. மாநில சட்ட ஆணையத்தின் பரிந்துரைகளை கருத்தில் கொண்டு அரசானது அத்தகைய மிகவும் பழமையான மற்றும் வழக்கத்தில் இல்லாமல் போயிருக்கிற சட்டங்களை நீக்கறவு செய்வதற்கு முடிவு செய்துள்ளது.

2. இச்சட்ட முன்வடிவானது, மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**எஸ். ரகுபதி,**
*சட்டத்துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை,
2022 மே 10.

**கி. சீனிவாசன்,**
*செயலாளர்.*

2022—ஆம் ஆண்டு மே திங்கள் 10—ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130—ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 42/2022**

**1994—ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தினை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் எழுபத்தி மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 21/1994.

104—ஆம் பிரிவிற்கானத் திருத்தம்,

2. (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் என சுட்டப்படுவதான) 1994—ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 104 ஆம் பிரிவின், (1) ஆம் உட்பிரிவில்,

(1) ''ஆய்வாளரால்'' எனும் சொற்றொடருக்காக, ''ஆய்வாளரால் அல்லது இதன் பொருட்டு அரசினால் அதிகாரமளிக்கப்பட்ட பிற அலுவலர் எவரினாலும்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

(2) முதலாம் மற்றும் இரண்டாம் வரம்புரைக்காக, பின்வரும் வரம்புரையானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். அதாவது:—

''வரம்புரையாக, இந்த உட்பிரிவின் கீழ் பணியிட மாற்றம் செய்தலில், ஆய்வாளர் அல்லது அரசினால் அதிகாரமளிக்கப்பட்ட பிற அலுவலர் எவரினாலும், அவரது கருத்திலுள்ள, அத்தகைய பணியிட மாறுதலுக்கு உரிய விளைவை அளிக்கும் நோக்கத்திற்காக தேவைப்படலாகும் அத்தகைய பொது அல்லது சிறப்பு ஆணையினை வழங்கலாம்.''.

106 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

3. முதன்மைச் சட்டத்தின் 106—ஆம் பிரிவிற்கு, பின்வரும் வரம்புரையானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:—

''வரம்புரையாக, கிராம ஊராட்சியின் செயலாளரைப் பொறுத்த நேர்வில், இந்தப் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரமானது இதன்பொருட்டு அரசால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் செயல்படுத்தப்படுதல் வேண்டும்.''.

**நோக்கக் காரண விளக்கவுரை.**

கிராம ஊராட்சியின் செயலாளர், காலமுறை ஊதியத்துடனான ஒரு நிலையான முழுநேர பணியாளர் ஆவார். தற்போது கிராம ஊராட்சிக்கு உதவி புரிந்து வரும் நிர்வாக பணியாளர் இவர் மட்டுமே ஆவார். ஊரக வளர்ச்சி திட்டங்கள் மற்றும் ஊராட்சி ஆகிய இரண்டிற்கும் அவர் அடித்தளமாக உள்ளதால், தற்போதைய சூழலில் கிராம ஊராட்சி செயலாளரின் பங்கானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். தற்போதைய நடைமுறையில் உள்ள பணியிட மாறுதலுக்கான வழிவகைகளின் காரணமாக, ஊராட்சி செயலாளர்கள், சொந்த கிராம ஊராட்சியிலேயே பல ஆண்டுகள் பணிபுரியும் சூழலால், கிராம ஊராட்சி செயலாளர் பல்வேறு அனுபவங்களை பெறுவது இடையூறாக உள்ளது மற்றும் பல நேர்வுகளில் கிராம ஊராட்சி செயலாளரின் செயல்திறம் மனநிறைவளிக்காதபோது, வேறு கிராம ஊராட்சிக்கு விருப்பத்தேர்வு இல்லாத நிலை உள்ளது. இதனை ஒப்பிடுகையில், ஊராட்சி ஒன்றியத்திற்கு பணியமர்த்தப்படும் அலுவலர்களானவர், பணியிட மாறுதலுக்கு உட்படுவர் மற்றும் அதன் மூலம் உள்ளாட்சி அமைப்பு மற்றும் மாவட்ட நிர்வாகத்திற்கு அதிக பொறுப்புடையவராவர். விதிமீறல் எதற்காகவும் அவருக்கு எதிராக, ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்கோ அல்லது அவருக்கெதிராக துறைரீதியான விசாரணை நடத்துவதற்கோ கிராம ஊராட்சியில், கிராம ஊராட்சி செயலாளரின் படிநிலைக்கு மேல், அலுவலர் எவருமில்லை. எனவே, கூறப்பட்ட நோக்கத்திற்காக, அலுவலர் ஒருவருக்கு அரசால் அதிகாரமளிக்கலாம் எனக் கருதப்படுகிறது.

2. எனவே அரசானது, மேற்சொன்ன நோக்கங்களுக்காக 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தினை (தமிழ்நாடு சட்டம் 21/1994) தக்கவாறு திருத்தம் செய்வது என முடிவு செய்துள்ளது.

3. இந்தச் சட்டமுன்வடிவானது, மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**கே.ஆர். பெரியகருப்பன்,**
*ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்.*

**சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு**

இச்சட்ட முன்வடிவின் 2 மற்றும் 3 ஆம் கூறுகள் 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 104 மற்றும் 106 ஆம் பிரிவுகளில் குறித்துரைக்கப்பட்டுள்ள நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக அரசுக்கு அதிகாரமளிக்கிறது.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையே அன்றி தனித்தன்மை வாய்ந்தவை அல்ல.

**கே.ஆர். பெரியகருப்பன்,**
*ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை,
2022 மே 10.

**கி. சீனிவாசன்,**
*செயலாளர்.*

**2022–**ஆம் ஆண்டு மே திங்கள் **10–**ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் **130–**ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது**.**

## சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 43/2022

**2012-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு சட்டத்தினை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் எழுபத்தி மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:-

**குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.**

1. (1) இந்தச் சட்டம், 2022-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**3-ஆம் பிரிவிற்கானத் திருத்தம்,**

**தமிழ்நாடு சட்டம் 22/2012.**

2. (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் என சுட்டப்படுவதான) 2012-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு சட்டத்தின், 3 ஆம் பிரிவில், (3) ஆம் உட்பிரிவிலுள்ள, (c) முதல் (m) வரையுள்ள கூறுகளுக்காக, பின்வரும் கூறுகளானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:-

“(c) அரசு தலைமைச் செயலாளர், *பதவி வழி* உறுப்பினர்;

(d) அரசுச் செயலாளர், நிதித்துறை, *பதவி வழி* உறுப்பினர் செயலாளராக இருத்தல் வேண்டும்; மற்றும்

(e) வாரியத்தின் தலைமைச் செயல் அலுவலர், *பதவி வழி* உறுப்பினர்.”.

**6-ஆம் பிரிவிற்கானத் திருத்தம்,**

3. முதன்மைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவிற்காக, பின்வரும் உட்பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:-

“(1) வாரியத்திற்கு, அரசால் நியமிக்கப்பட்ட தலைமைச் செயல் அலுவலர் ஒருவர் இருத்தல் வேண்டும்.”;

(2) (2) ஆம் உட்பிரிவில், “அரசின் ஒப்புதலுடன்” எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

**9-ஆம் பிரிவிற்கானத் திருத்தம்,**

4. முதன்மைச் சட்டத்தின் 9 ஆம் பிரிவில், (2) ஆம் உட்பிரிவிலுள்ள, (c) முதல் (l) வரையுள்ள கூறுகளுக்காக, பின்வரும் கூறுகளானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:-

(c) வாரியத்தின் தலைமைச் செயல் அலுவலர், *பதவி வழி* உறுப்பினர் செயலாளராக இருத்தல் வேண்டும்; மற்றும்

(d) செயற்குழுவின் தலைமையாளரால் நியமிக்கப்படலாகும், நிதி, பொருளாதாரம், உள்கட்டமைப்பு மற்றும் அது போன்ற புலங்களில் இரண்டு நபர்களுக்கும் மேற்படாத வல்லுநர்கள்:”.

**15-ஆம் பிரிவிற்கானத் திருத்தம்,**

5. முதன்மைச் சட்டத்தின் 15 ஆம் பிரிவிலுள்ள, (2) ஆம் உட்பிரிவானது, விட்டுவிடப்படுதல் வேண்டும்.

**நோக்கக் காரண விளக்கவுரை**

தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தின் அமைப்பு மற்றும் செயற்பணிகள், 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டுச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/2012) வரைமுறைகளினால் நிர்வகிக்கப்படுகிறது. மேலும் உள்கட்டமைப்பு மேம்பாட்டில் தனியார் துறை பங்கேற்பை மேலும் ஊக்குவிக்க மற்றும் திட்டங்களைச் செயல்படுத்துவதை கோட்பாட்டளவிலிருந்து முழு செயல்முறைக்கு விரைவுபடுத்த, நிறுவன கட்டமைப்பை வலுப்படுத்துதல், நடைமுறைகளை எளிமைப்படுத்துதல் மற்றும் உரிய அளவில் செயற்பணிகளை ஒப்படைத்தல் ஆகியன தேவையானதாகின்றன.

2. எனவே, மேற்சொன்ன நோக்கங்களுக்காக, 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டுச் சட்டத்தினை (தமிழ்நாடு சட்டம் 22/2012) தக்கவாறு திருத்தம் செய்வதென அரசானது முடிவு செய்துள்ளது.

3. இந்தச் சட்ட முன்வடிவானது மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

முனைவர் பழனிவேல் தியாக ராஜன்,
*நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை,
2022 மே 10.

**கி. சீனிவாசன்,**
*செயலாளர்.*

**2022–**ஆம் ஆண்டு மே திங்கள் **10–**ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் **130–**ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது**.**

## சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 44/2022

**2022–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1–ஆம் நாளில் தொடங்கிய நிதியாண்டின் பணிகளுக்காகவும், நோக்கங்களுக்காகவும், மாநிலத் தொகுநிதியத்திலிருந்து தொகைகளை ஒதுக்கீடு செய்ய வகை செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் எழுபத்து மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

1. இந்தச் சட்டம், 2022–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச்(எண். 3) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பு.

2022–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1–ஆம் நாளில் தொடங்கிய நிதியாண்டின் பணிகளுக்காகவும், நோக்கங்களுக்காகவும் மாநிலத் தொகுநிதியத்திலிருந்து நிதி ஒதுக்கீடு செய்தல்.

தமிழ்நாடு சட்டம் ………/2022

